

## திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,

## BEST COLLECTOR

**திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்**, இ.ஆ.ப., அவர்கள் கடந்த 15.06.2021முதல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவராக பணிபுரிந்து வருகிறார். மாற்றுத்திறனாளிகள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு திட்டங்களை தனிக்கவனத்துடன் செயல்படுத்தி வருகிறார். மாற்றுத்திறனாளிகளை வீடு வீடாக கணக்கீடு செய்து 23,000–க்கு மேற்பட்டவர்களை கண்டறிந்து அவர்களுக்கு தேசிய அடையாள அட்டை, மருத்துவ மற்றும் மறுவாழ்வு உதவிகள் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். மேலும் 4777 பயனாளிகளுக்கு ரூ.1.48 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும் வழங்கியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் உதவிகள் மற்றும் கோரிக்கைகள் வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தையும் உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக 19.05.2022 முதல் 08.07.2022 வரை சிறப்பு முகாம்கள் நடத்தி மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள் மற்றும் UDID அடையாள அட்டை வழங்கிடவும், மாற்றுத்திறனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கியும், மாற்றுத்திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கியும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மாற்றுத்திறனாளிகள் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடத்தி 60 நபர்களுக்கு பணி ஆணை வழங்கியுள்ளார். இவ்வாறு மாற்றுத்திறனாளிகள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு சிறந்த முறையில் அவர்களுக்காக பணிபுரிந்து வரும் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் மாவட்டம் அவர்களை பாராட்டி மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கான தமிழ்நாடு அரசின் விருது வழங்கப்படுகிறது.

**Thiru. DINESH PONRAJ OLIVER, I.A.S.,** District Collector has been serving in Tanjore District since 15.06.2021 and executes all schemes for Differently Abled with more concern on their welfare. More than 23,000 DAPs were identified during surgery and national identification cards, medical certificates and various rehabilitation assistances have been provided for them. He has provided welfare assistance benefits to 4777 beneficiaries at the cost of Rs.1.48 crore. He has made spot disposal of grievance petitions by distribution of assistances during the grievance day meetings. Since 19.05.2022 to 08.07.2022, special camps have been conducted at Panchayat union level to provide UDID cards, welfare assistances and maintenance allowances; Special job melas have also been organized to help 60 DAPs to get appointment order.

Hence, the District Collector Mr. Dinesh Ponraj Oliver, I.A.S., has been honored as "**Best Collector"** for his outstanding service for DAPs at Tanjore District.